மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான், வழக்கம்போலத்தான் சொல்கிறேன். அறையில் வந்து கேளுங்கள். (சிரிப்பு)

திரு. துரைமுருகன்: இரண்டாவது பிரச்சினை ராணி மேரி கல்லூரி...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. எடுத்துக்கொள்ளவில்லை. ஒத்திவைப்புப் பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அறையில் வந்து கேளுங்கள். காவல் துறை மானியக் கோரிக்கைகள் இன்றும், நாளையும் இருக்கின்ற காரணத்தினால் எந்த ஒத்திவைப்புப் பிரச்சினையையும் எடுத்துக்கொள்ளவில்லை. 10 ஆம் தேதி எடுத்துக்கொள்வதற்கு யோசிப்போம்.

திரு. துரைமுருகன்: இன்றும், நாளையும் இல்லாமல், நாளை மறுதினம் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்னதற்குத் தங்களுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியெல்லாம் சொல்லவில்லை.

(ஆ) திரு. பரிதி இளம்வழுதியைப் பேரவைப் பணிகளினின்று நீக்கி வைத்த நாட்களைக் குறைக்கக் கோருதல்

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்கி 18 நாட்கள் ஆகிவிட்டன. சட்டமன்றக் கூட்டங்களிலே எல்லா உறுப்பினர்களும் கலந்துகொண்டு தங்களுடைய கருத்துகளைக் கூறுவதோடு அவர்களுடைய தொகுதிப் பிரச்சினைகளை, மக்கள் பிரச்சினைகளையெல்லாம் எடுத்துரைப்பதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். சென்ற கூட்டத்தொடரிலே suspend செய்யப்பட்ட உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் இந்தக் கூட்டத்தொடரிலேயும் அதே நிலையிலே, சட்டசபைக்கு வர முடியாத நிலையிலே இருக்கிறார்கள். அவர் மீண்டும் சட்டசபைக்கு வந்து, சட்டசபை நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டு கடமை ஆற்றுவதற்குத் தாங்கள் வழிகோல வேண்டுமென்று நான்—அவர் சார்பிலே அல்ல, அவர் கட்சி சார்பிலேகூட அல்ல—அனைத்து உறுப்பினர்கள் சார்பிலேயும் (குறுக்கீடுகள்) குறிப்பாக அனைத்து எதிர்க்கட்சிகள் சார்பிலேயும் (குறுக்கீடுகள்) கோரிக்கை வைக்கிறேன். நியாயமான கோரிக்கை. இதுவரை யாருமே இரண்டு தொடர்கள் சேர்ந்தாற்போல் சட்ட சபையிலேயிருந்து suspend செய்யப்பட்டது கிடையாது.

2003 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு சட்டமன்ற உறுப்பினர் தவறான முறையில், தகாத முறையில் சபையின் கண்ணியத்திற்கு விரோதமாக நடந்துகொண்ட காரணத்தினால் நீக்கி வைக்கப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தங்களுக்கு அதனுடைய தொடர்ச்சியான விவரங்கள் எல்லாம் தெரியும். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர் தவறாக நடக்கும்பட்சத்தில், அவரைத் திருத்த முற்பட வேண்டுமே தவிர, களங்கத்தை முகத்திலே வைத்துக்கொண்டு கண்ணாடியைத் துடைக்க முற்படக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அடுத்த கூட்டத்தொடரிலே அவர் வந்து கலந்துகொள்ளலாம்.

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக நான் அந்த முயற்சியில் ஈடுபடவில்லை. பொதுவாக யாராக இருந்தாலும் கலந்துகொள்வதற்கு நீங்கள் வழி காண வேண்டும். தவறு செய்திருந்தால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பதிலைச் சொல்லிவிட்டேன். இனி, அதற்கு மேல் அந்தப் பிரச்சினையை எழுப்ப நான் அனுமதிக்கவில்லை. 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர்—தார்மீகக் கடமைகளை—தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் செய்ய வேண்டிய...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, அந்த விவரம் எல்லாம் உங்களுக்குத் தெரியும். எப்படிப்பட்ட சூழ்நிலையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியும். அதனால் உட்காருங்கள். மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21-உள் துறை—காவல்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வரலாற்றிலேயே இதுவரையிலே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பினை இந்தச் சட்டமன்றத்திலே வழங்கியது கிடையாது. ஒரு பதற்றமான சூழ்நிலையில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதற்றமான சூழ்நிலையே கிடையாது. பிரச்சினை எல்லோருக்கும் தெரியும். அந்தக் கசப்பை மறுபடியும் நான் இங்கே அரங்கேற்ற விரும்பவில்லை. உட்காருங்கள்.

உள் துறை-காவல். (குறுக்கீடு) உட்காருங்கள். இதுபற்றி எஸ்.ஆர்.பி. அவர்கள் பிரச்சினையை எழுப்பினார்கள். பதிலைச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள். அதற்கு மேல் இதை எழுப்புவதற்கு நான் அனுமதிக்கவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. ஹேமச்சந்திரன்.

2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 21-உள் துறை - காவல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்ன கேட்க வேண்டும்? துரைமுருகன், சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து முழுமையாக நீக்கப்படுகிறது.

3. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 21-உள் துறை-காவல்

(ஆ) கோரிக்கை எண் 22-உள் துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள்

(அ) கோரிக்கை எண் 21-உள் துறை-காவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 21-உள் துறை-காவல். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-05

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உள் துறை-காவல் பற்றிய 21 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,237,10,20,000 மூலதனக் கணக்கில் ரூ.152,89,53,000 மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000 ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.